நாள்: 26.06.2014

தினமணி

**விவசாயிகளின் நாடித்துடிப்பு நல்லாறு திட்டம்-என்.ஆர்.மகேஷ்குமார்**

பொள்ளாச்சி:

தமிழக- கேரள மாநிலங்களிடையிலான நதிநீர்ப் பங்கீட்டு ஒப்பந்தப்படி அப்பர் நீராறு அணையிலிருந்து ஆண்டிற்கு 9 டிஎம்சி தண்ணீரை நேரடியாக எடுத்துக்கொள்ள முழு உரிமை இருந்தும், தண்ணீரை நேரடியாக எடுக்காததால் 4 டிஎம்சி வரை தமிழகத்திற்கு நீர் இழப்பு ஏற்படுகிறது.

இந்நிலையில், நல்லாறு திட்டத்தை தமிழக அரசு நிறைவேற்றினால் திருமூர்த்தி அணையில் இருந்து தடையில்லாமல் பாசனத்திற்கு தண்ணீர் வழங்க முடியும்.

திட்டத்தின் தேவை:

பரம்பிக்குளம்- ஆழியாறு பாசனத் (பி.ஏ.பி.) திட்டத்தில் மேல்நீராறு, கீழ் நீராறு அணை மூலமாகக் கிடைக்கும் தண்ணீர் சோலையாறு அணைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. சோலையாறு அணையில் இருந்து மானாம்பள்ளி மின்நிலையம் மற்றும் சேடல்டேம் வழியாக பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது.

அங்கிருந்து தூணக்கடவு, பெருவாரிப்பள்ளம் வழியாக சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. அதன்பின், காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கும், ஆழியாறு

ஃபீடர் கால்வாய் வழியாக ஆழியாறு அணைக்கும் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது.

தண்ணீர் திருமூர்த்தி அணையை அடைய ஆகும் தூரம் 200 கி.மீ. ஆகும். மொத்தத்தில் இதில் 4 டிஎம்சி தண்ணீர் விரயம் ஏற்படுகிறது. காண்டூர் கால்வாயில் 30 சதவீதம் தண்ணீர் விரயம் இருப்பதாக பி.ஏ.பி. திட்டக் குழுத் தலைவர் தெரிவிக்கிறார்.காண்டூர் கால்வாயில் எதிர்பாராத பழுதுகள் ஏற்படும்போது, நீர்ப்போக்கு தடைபடுகிறது. இதுதவிர, பரம்பிக்குளத்தில் இருந்து தூணக்கடவு அணைக்கும், தூணக்கடவு அணையில் இருந்து சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம் மூலமாக காண்டூர் கால்வாய்க்கும் சுரங்கக் கால்வாய்கள் (டனல்) மூலமாகவே தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. தூணக்கடவு அணையில் இருந்து சர்கார்பதிக்கு அதிகபட்சமாக 1,000 கனஅடி மட்டுமே தண்ணீர் கொண்டுசெல்ல முடியும். மழை அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் டனல்கள் வழியாக 1,000 கனஅடி தண்ணீர் மட்டுமே தமிழகத்திற்கு கொண்டு செல்லமுடியும். இதன்காரணமாக, பரம்பிக்குளம் அணை தனது கொள்ளளவான 17,820 கன அடி தண்ணீர் நிறைந்தவுடன், வேறு வழியின்றி சாலக்குடி ஆறு வழியாக கடலுக்குச் செல்கிறது. இப்படி தண்ணீர் அதிகமாகக் கிடைத்தாலும் சில நேரங்களில் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.

ரூ. 550 கோடி மதிப்பீடு:

நல்லாறு அணை கட்டுவதற்கு 2014-15ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடாக ரூ. 550 கோடி செலவாகும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் உத்தேச மதிப்பீடு தயாரித்து காவிரி தொழில்நுட்ப ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும், நல்லாறு அணைத் திட்டம் மூலமாக தலா 125 மெ.வா. திறன் கொண்ட இரு மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து 250 மெ.வா. மின் உற்பத்தி செய்ய முடியும்.

நல்லாறு அணை கட்டுவதன் மூலமாக, மேல்நீராறு தண்ணீரை நல்லாறு அணைக்கு நேரடியாகக் கொண்டுசெல்ல முடியும். மேலும், நல்லாறு அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீரைக் கொண்டு வரலாம். இதனால்

தண்ணீரைக் கொண்டு வருவதில் ஏற்படும் காலதாமதமும், நீர் விரயமும் தவிர்க்கப்படும்.

நல்லாறு அணைக்கு நீர் வரும் பாதையில் 14.40 கி.மீ. தூரத்துக்கு டனல் அமைத்தால் தண்ணீர் நல்லாற்றில் வந்து சேர்ந்துவிடும். தண்ணீர் வந்துசேரும் இடத்தில் நல்லாற்றில் சிறிய அணை கட்டி, அதிலிருந்து தண்ணீரை நேரடியாக திருமூர்த்தி அணைக்குக் கொண்டு சேர்க்கமுடியும்.

இத்திட்டத்தில் 9.00 டிஎம்சி தண்ணீரைப் பெறுவதுடன் மின்சார உற்பத்தியும் செய்ய முடியும் என்கின்றனர் பி.ஏ.பி. விவசாயிகள் மற்றும் சில அதிகாரிகள்.

இழப்பு கேரளத்திற்கும் தான்:

பி.ஏ.பி. திட்டத்தில் பரம்பிக்குளம், தூணக்கடவு, பெருவாரிப்பள்ளம் ஆகிய அணைகள் விஷயத்தில் கேரளம் குழப்பத்தை ஏற்படுத்தினால், அதில் கண்டிப்பாக அவர்களுக்கே அதிக இழப்பு ஏற்படும்.பி.ஏ.பி. திட்டத்தில் கேரள சோலையாறு அணை வழியாகவோ, பரம்பிக்குளம் அணை வழியாகவோ விவசாயத்திற்கோ, குடிநீருக்கோ கேரள அரசு தண்ணீரை பயன்படுத்துவதில்லை.

தமிழகத்தில் இருந்து ஆழியாறு - மணக்கடவு அணைகள் வழியாக கேரளத்தில் உள்ள மூலத்தரா அணைக்கு வழங்கும் 7.25 டிஎம்சி தண்ணீர் மூலமே 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் கேரள மாநிலம், சித்தூர் தாலுகாவில் பாசன வசதி பெறுவதுடன், பாலக்காடு மாவட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு குடிநீரும் கிடைத்து வருகிறது.

கேரள அரசும், அரசியல் கட்சியினரும் இத்திட்டத்தில் உள்ள பரம்பிக்குளம், தூணக்கடவு, பெருவாரிப்பள்ளம் அணைகள் பற்றியும், நதிநீர்ப் பங்கீடு பற்றியும் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் குழப்பம் ஏற்படுத்தி, இருமாநில விவசாயிகளின் நல்லுறவில் விரிசல் ஏற்படுத்தினால், அதனால் கண்டிப்பாக இழப்பு கேரளத்திற்குத் தான் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

## பேக்கர்ஸ் தொழில்நுட்ப கண்காட்சி நாளை துவக்கம்

**கோவை:**

கோவையில் உள்ள கொடிசியா வளாகத்தில் பேக்கரி தொழில்நுட்ப கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை துவங்குகிறது.

இதுகுறித்து சினர்ஜி எக்ஸ்போஸர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பிரிஜேஷ் எட்வர்டு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

இக்கண்காட்சியில் பேக்கரி தயாரிப்புக்கு தேவையான ரோட்டரி அடுப்புகள், டெக் ஓவன், குக்கி பரப்பிகள், குளிர்பாதன இயந்திரங்கள், பால் பொருள்கள், பல்வேறு பேக்கரி உபகரணங்கள் மற்றும் சேவைகள் அடங்கிய 50-க்கு மேற்பட்ட அரங்குகள் இடம்பெறவுள்ளன. அதேநேரத்தில் உற்பத்தியாளர்கள் மற்றும் பேக்கரி விநியோக சேவை வல்லுநர்களைச் சந்திக்க வாய்ப்புள்ளது. மேலும் பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பேக்கரி தொழில்நுட்பம் குறித்த கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. இக்கண்காட்சி ஜூன் 27-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது

## வெள்ளக்கோவிலில் கொப்பரை ஏலம்

**வெள்ளக்கோவில்**:

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.16 லட்சத்து 56 ஆயிரத்து 570-க்கு கொப்பரை விற்பனையானது.

இங்கு வாரந்தோறும் புதன்கிழமை கொப்பரை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த வாரம் 396 மூட்டைகளில், 19 ஆயிரத்து 96 கிலோ கொப்பரையை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர்.

முதல் தரம் அதிகபட்சமாக கிலோ ரூ.97.15-க்கும், முதல் தர கீழ் விலை ரூ.82.15, இரண்டாம் தர மேல் விலை ரூ.81.65, கீழ் விலை ரூ.60.05-க்கும் ஏலம் போனது. கடந்த வாரத்தைப் போலவே வரத்தும், விலையும் சீராக இருந்தது. விற்பனைக் கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் மேற்பார்வையில் ஏலம் நடைபெற்றது.

**<u>கறிக்கோழி கொள்முதல் விலை உயர்வு</u>**

**பல்லடம்**:

கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை செவ்வாய்க்கிழமை கிலோ ரூ.68 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் புதன்கிழமை கொள்முதல் விலை கிலோ ரூ.72 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.60, சென்னையில் ரூ.3.95.

**<u>வேளாண் துறையில் காலியிடம்: ஜூலை 4-ல் நேர்முகத் தேர்வு</u>**

**திருவண்ணாமலை**:

திருவண்ணாமலை மாவட்ட வேளாண் துறையில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஜூலை 4-ல் நடைபெறும் நேர்முகத் தேர்வில் தகுதியானோர் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் செயலாக்கத்துக்கு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் காலிப் பணியிடங்களை நிரப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

இப் பணியிடத்துக்கு இளங்கலை, முதுகலை பொறியாளர், வேளாண்மை படிப்பில் பட்டம் மற்றும் பட்டயம் பெற்று முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இது முற்றிலும் தாற்காலிகப் பணியிடம். ஒரு பொறியாளர் பணியிடத்தையும், 3 வேளாண்மை நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் பணியிடத்தையும் நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழுவால்

நடத்தப்படுகிறது.

எனவே, தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் ஜூலை 4-ம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் அனைத்து அசல் சான்றிதழ்களுடன் பங்கேற்று பயன்பெறலாம் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**காய்ந்து வரும் நிலம்: விவசாயிகள் கவலை**

**மதுராந்தகம்** : மதுராந்தகம் பகுதிகளில் நிலத்தடி நீர் குறைந்து வருவதால், பயிர்கள் நீரின்றி கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதால், காஞ்சிபுரம் மாவட்ட பகுதிகளில், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. **15 ஆண்டுகளுக்கு முன் :** இதனால், நகர் புறங்கள் மட்டுமின்றி, கிராமப் புறங்களிலும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டு வருகிறது. இது ஒருபுறம் இருக்க, விவசாயிகள் விதைத்த நெற்பயிர், நீரின்றி காய்ந்து வருகிறது. இதனால், விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர்.

ஒன்றியத்திற்குட்பட்டது, கரிக்கிலி ஊராட்சி. இவ்வூராட்சி உள்ளடங்கிய சித்தாமூர் கிராமத்தில், 50 ஏக்கர் பரப்பளவில், பெரிய ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரிநீரால் சுற்றியுள்ள, 98 ஏக்கர் விவசாய நிலங்கள், பாசன வசதி பெற்று வந்தன. ஆண்டுதோறும் இரண்டு போகம் பயிர் செய்து, விவசாயிகள் பயனடைந்து வந்தனர்.ஆனால், 15 ஆண்டுகளுக்கு முன், இந்த ஏரியில் உள்ள மதகு, முற்றிலும்

பழுதடைந்தது. இதனால், மழைக்காலங்களில் ஏரியில் நிரம்பும் நீர், பழுதடைந்த மதகு வழியாக, வீணாக வெளியேறி வருகிறது.

**கருகும் அபாயம்** : இதுகுறித்து, ஊராட்சி மன்றக் கூட்டங்களில், பலமுறை தீர்மானம் நிறைவேற்றியும், ஏரியை சீரமைப்பதில், அதிகாரிகள் அலட்சியம் காட்டி வருகின்றனர். தற்போது, ஏரிநீரை நம்பி பயிர் செய்த விவசாயிகள், பயிர் செய்வதை நிறுத்திவிட, சில விவசாயிகள், கிணற்று நீர் மூலம் பயிர் செய்தனர். ஆனால், நிலத்தடி நீரும் வற்றியதால், போதுமான நீர் கிடைக்காமல், பயிர் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பெரும் கவலையில் உள்ளனர்.எனவே, மழைக்காலம் துவங்கு வதற்கு முன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏரிகளை துார் வாரி, கரைகளை பலப்படுத்தி, மதகுகளை சீர்செய்து தர வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## காய்கறி பயிரில் அதிக மகசூல் எப்படி?

**திருவள்ளூர்** : காய்கறி பயிர் செலவை குறைத்து, அதிக மகசூல் பெற, விதை பரிசோதனை செய்ய வேண்டும் என, வேளாண் விதை பரிசோதனை அலுவலர் தெரிவித்து உள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில், தற்போது கத்திரி, மிளகாய், கீரை, தக்காளி போன்ற காய்கறிகள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. காய்கறி பயிரிடும் முன், விதையின் முளைப்பு திறன் அறிந்து, பயிரிட்டால் குறைந்த செலவில், அதிக லாபம் ஈட்ட முடியும்.எனவே, விவசாயிகள், கத்திரி, மிளகாய், சுரை விதைகளை, 150 கிராம் வீதமும், கீரை, தக்காளி விதைகளை, 70 கிராம் வீதமும் எடுத்து, திருவள்ளூர் ஆயில் மில் பேருந்து நிறுத்தம் அருகில், பெரியகுப்பத்தில் செயல்படும், விதை பரிசோதனை அலுவலகத்திடம் வழங்கி, முளைப்பு திறனை அறிந்து

கொள்ளலாம்.விதை பரிசோதனைக்கு கட்டணம் 30 ரூபாய், என, மூத்த வேளாண்மை விதை பரிசோதனை அலுவலர், ஞானசேகரன் தெரிவித்து உள்ளார்.

## <u>குறைந்தது ! : மயிலம் பகுதியில் வெங்காய சாகுபடி .... : போதிய விலை கிடைக்காததால் ஆர்வமில்லை</u>

**மயிலம்**: மயிலம் பகுதியில் வெங்காயம் சாகுபடி செய்வதில் விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்துள்ளது. போதிய விலை கிடைக்காமல் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.

மயிலம் ஒன்றியத்தில் தென்கொளப்பாக்கம், எடப்பாளையம் மயிலம், கூட்டேரிப்பட்டு, செண்டூர், வெளியனூர், கன்னியம், கொணமங்கலம், மேட்டு நத்தம் , ஏரளிக்குப்பம், தென் ஆலப்பாக்கம், கொல்லியங்குணம், தழுதாளி, நல்லாமூர், பாதிராப்பூலியூர் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில், சில ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகள் அதிக பரப்பளவில் வெங்காயத்தை ஆர்வத்துடன் சாகுபடி செய்து வந்தனர்.

மயிலம் பகுதியில் விளையும் வெங்காயத்தை வியாபாரிகள் வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பினர். இப்பகுதியில் விளையும் சின்ன வெங்காயம் மருத்துவ குணம் கொண்டதால் பலரும் வாங்கினர்.

வெங்காயம் பயிரிடுவதற்கு மே, ஜூன் மாதங்கள் ஏற்றதாகும். இப்பகுதி விவசாயிகள் வெங்காய விதைகளை புதுச்சேரி மாநிலத்தி<லுள்ள அரியாங்குப்பம் பகுதியில் வாங்கி வந்து நிலத்தை பண்படுத்தி நாற்று விடுகின்றனர். 45 நாட்கள் சென்ற பின்னர் வெங்காயத்தை நடவு செய்கின்றனர். அக்டோபர், நவம்பர் மாதங்களில் நன்றாக விளைந்த வெங்காயம் அறுவடைக்கு தயாராகிறது.

தீபாவளி சீசன் நேரத்தில் அறுவடையாவதால் 75 கிலோ மூட்டை 3,500 ரூபாய் வரையில் விலை போகும்.

சாகுபடி குறைந்தது

கடந்த ஆண்டு மழை பொய்த்து ஏரி, குளங்களில் நீர் மட்டம் குறைந்தது.கிணற்றுப் பாசனம் செய்யும் விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்வதை குறைத்துள்ளனர்.

இந்த ஆண்டு பருவ மழை அதிகமாக இருந்தால் நடவு செய்துள்ள வெங்காய பயிர்களை காப்பாற்ற முடியும் என விவசாயிகள் நம்பிக்கையில் உள்ளனர்.

மயிலம் பகுதியில் வேலை உறுதி திட்ட பணிக்கு மக்கள் அதிகம் செல்வதால் விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. பல விவசாயிகள் குடும்ப உறுப்பினர்களை பயன்படுத்தி வெங்காயம் சாகுபடி செய்கின்றனர்.

வெங்காய பயிரில் புல், செடிகள், கொடிகள் களைகளை வளராமல் நீக்கினால் நன்றாக வளரும். பல சூழல்களில் பயிரிட்ட வெங்காயத்தை விற்க விவசாயிகளுக்கு போதிய சந்தை வசதி கிடைக்காததால், கிராமத்திற்கு வரும் வியாபாரிகள் குறைந்த விலை கேட்கின்றனர்.

மயிலம் பகுதி விவசாயிகள் வெங்காயத்தை தாள்களுடன் சென்னைக் கோயம்பேடு, திருச்சி, சேலம், வேலூர் போன்ற இடங்களுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

செடியாக விற்றால் சற்று கூடுதல் லாபம் கிடைக்கிறது என விவசாயிகள் கூறுகின்றனர். சென்னை போன்ற பெரிய நகரங்களிலுள்ள ஸ்டார் ஓட்டல்களில் வெங்காயத் தாள்கள் உணவில் சேர்க்கின்றனர். இதனால் மயிலம் பகுதியில் அறுவடைக்கு முன்பு இளம் வெங்காயச் செடிகளை பறித்து கோயம்பேடு போன்ற மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

ஆலோசனை

மயிலம் பகுதியில் அதிகளவில் வெங்காயம் பயிரிட,வேளாண்மைத் துறையினர் விவசாயிகளுக்கு தேவையான சாகுபடி தொழில் நுட்பங்களை கூறவேண்டும்.

விவசாயிகளுக்கு தேவையான விதைகள், பூச்சி மருந்துகள், உரம் போன்றவற்றை மானிய விலையில் வழங்க வேண்டும். அப்போது தான் அதிக அளவில் வெங்காயம் சாகுபடி செய்ய முடியும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

## சந்தையில் விலை குறைவு: ஆடு வளர்ப்போர் கவலை

**உளுந்தூர்பேட்டை**: உளுந்தூர்பேட்டை ஆட்டு வார சந்தையில் அடி மாட்டு விலையால் ஆட்டு உரிமையாளர்கள் கடும் அதிர்ச்சியடைந் துள்ளனர்.

உளுந்தூர்பேட்டை டி.எஸ்.பி., அலுவலகம் எதிரே புதன்கிழமைகளில் ஆட்டு வார சந்தை நடக் கிறது. உளுந்தூர் பேட்டை, எலவனாசூர் கோட்டை, மடப்பட்டு, திருநாவலூர், திருக்கோவிலூர், தியாகதுருகம், சிதம்பரம், விருத்தாசலம் உட்பட பல பகுதிகளில் இருந்து ஆடுகளை விற்பனைக்கு ஓட்டி வருகின்றனர். சில வாரங்களாக உளுந்தூர்பேட்டை ஆட்டு வார சந்தைக்கு வியாபாரிகள் அதிகளவில் வரவில்லை. இதனால் விலை கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. வரும் வியாபாரிகள் குறைந்த விலைக்கு ஆடுகளை கேட்பதால், ஆட்டின் உரிமையாளர்கள் கவலையடைந்துள்ளனர். நேற்று நடந்த ஆட்டு வார சந்தைக்கு 1,100 ஆடுகள் விற்பனைகாக வந்தன. அந்த ஆடுகளில் ரூ. 4,500க்கு விற்கவேண்டிய சிறிய ஆடுகள் கூட ரூ. 1,500க்கு வியாபாரிகள் கேட்டனர். மேலும், ரூ. 14 ஆயிரத்திற்கு விற்க வேண்டிய வளர்ந்த ஆடுகளை ரூ.9 ஆயிரத்திற்கு கேட் டனர். குறைந்த விலையால் ஆட்டு உரிமையாளர்கள் பலர், ஏமாற்றத்து டன் ஆடுகளை ஓட்டிச் சென்றனர்.

## கோதுமை கொள்முதல்2.79 கோடி டன்னை எட்டும்

**புதுடில்லி** :நடப்பு 2014 – 15ம் கோதுமை கொள்முதல் பருவத்தில் (ஏப்., – ஜூன்), மத்திய அரசின் கோதுமை கொள்முதல், கடந்த பருவத்தை விட, 10 சதவீதம் அதிகரித்து, 2.79 கோடி டன்னாக (2.54 கோடி டன்) உயரும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

கோதுமை உற்பத்தியில் முன்னணியில் உள்ள பஞ்சாப் மாநிலத்தில் இதன் கொள்முதல், 5.5 சதவீதம் வளர்ச்சி கண்டு, 1.10 கோடி டன்னிலிருந்து, 1.16 கோடி டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இதே போன்று, அரியானா மாநிலத்தில் கோதுமை கொள்முதல், 16 சதவீதம் உயர்ந்து, 56 லட்சம் டன்னிலிருந்து, 64.90 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.மேலும், மத்திய பிரதேசத்திலும் இதன்

கொள்முதல், 18 சதவீதம் வளர்ச்சி கண்டு, 63.50 லட்சம் டன்னிலிருந்து, 71 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

நடப்பு கோதுமை கொள்முதல் பருவத்தில், அரசு முகமை அமைப்புகளின் கோதுமை கொள் முதல், கிட்டத்தட்ட முடிந்து விட்டது.அதே சமயம், நடப்பு 2014 – 15ம் கோதுமை சந்தைப் படுத்தும் பருவத்தில், (ஏப்., – மார்ச்) 3.10 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்ய, மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**கருப்பு தேயிலைஉற்பத்தியில் சரிவு**

**குன்னூர்** :சர்வதேச கருப்பு தேயிலை உற்பத்தி, நடப்பாண்டு ஜன., – மே, வரை, 5.14 சதவீதம் சரிவடைந்து, 46.83 கோடி கிலோவாக குறைந்து உள்ளது.இலங்கையில் கருப்பு தேயிலை உற்பத்தி, 1.14 கோடி கிலோ சரிவடைந்து உள்ளது. இந்தியா மற்றும் தான்சானியாவில், இதன் உற்பத்தி முறையே, 1 கோடி மற்றும் 49.70 லட்சம் கிலோ குறைந்துள்ளது.மாலவி நாட்டில், கருப்பு தேயிலை உற்பத்தி, 2.79 கோடி கிலோவிலிருந்து, 3.27 கோடி கிலோவாக வளர்ச்சி கண்டுள்ளது.

**அரிசி விலை குவின்டாலுக்கு ரூ.500 உயர்வு: லாரி, ரயில் கட்டண உயர்வால் மேலும் எகிறும்**

**சென்னை**: தமிழகத்தில், வழக்கமாக, ஜனவரி 2 வது வாரம், முதல் நெல் அறுவடையும், நடக்கும்; மே, ஜூன் மாதங்களில், 2 வது நெல்அறுவடையும் நடக்கும். நடப்பாண்டு, 2 அறுவடை பருவங்களிலும், எதிர்பார்த்த அளவு, நெல் விளைச்சல் இல்லை. இதனால், தமிழகத்தில், நெல்லுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. கர்நாடகவில், போதிய அளவு மழை பெய்து, அதிக நெல் விளைச்சல் உள்ளது. அங்கிருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்த நெல்,

அரிசியின் வரத்தில், சரிவு ஏற்பட்டு உள்ளது. இதனால், தமிழகத்தில் நெல்லின் விலை, குவின்டாலுக்கு, 500 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. அதன் காரணமாக, அனைத்து ரக அரிசியின் விலையிலும், குவின்டாலுக்கு, 400 முதல் 500 ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டு உள்ளது. சேலம் அரிசி மொத்த வியாபாரி சின்னதுரை கூறியதாவது: லாரி வாடகை, 20 சதவீதம் உயர்வு, ரயில்களில் சரக்கு கட்டணம் உயர்வு, மூட்டைத் தூக்கும் தொழிலாளர்களுக்கான கூலியும் உயர்த்தப்பட்டு உள்ளதால், ஜூலை முதல் வாரத்தில், அரிசி விலையில், குவின்டாலுக்கு மேலும் ரூ.200 வரை உயர, வாய்ப்பு உள்ளது, என்றார்.

## பக்கத்தில் நெருங்க மறுக்கும் பருவமழை! 300 ஏக்கர் உருளை கிழங்குக்கு சிக்கல்

**ஊட்டி :** ஏமாற்றி வரும் தென்மேற்கு பருவ மழையால், ஊட்டியில் 300 ஏக்கர் பரப்பளவில், உருளைக்கிழங்கு பயிர்கள் நாசமாகியுள்ளன. தண்ணீர் பஞ்சத்தால், விவசாயிகள் தோட்டங்களுக்கு லாரித் தண்ணீரை பாய்ச்சி வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, கோத்தகிரி, குன்னூார் உட்பட பல இடங்களில், 600 ஏக்கர் பரப்பளவில், உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. ஜூன், ஜூலை மாதங்களில் பெய்ய வேண்டிய தென் மேற்கு பருவமழையை நம்பி, கடைபோக சாகுபடியில், ஊட்டி நகரை சுற்றியுள்ள கவரட்டி, அணிக்கொரை, குருத்துக்குளி உட்பட பல கிராமங்களில் வசிக்கும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 300 ஏக்கர் பரப்பளவில் உருளைக் கிழங்கு சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர்.ஊட்டியின் மேற்கு பகுதிகளில், மழை பெய்யாததால் உருளைக்கிழங்கு விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

ஊட்டியில் இருந்து தினமும், 50 லோடு (ஒரு லோடு என்பது 10 டன்) உருளைக்கிழங்கு, மேட்டுப்பாளையம் சந்தைக்கு அனுப்பப்பட்டு வந்தது. தற்போது, 5 லோடு (50 டன்) மட்டுமே அனுப்பப்படுகிறது. வரத்து குறைவால்,

சந்தையில் கிலோ 25-30 ரூபாய்க்கு விற்று வந்த ஊட்டி உருளைக் கிழங்கு, தற்போது 40-45 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

விவசாயிகள் பெரியசாமி, மொய்தீன் ஆகியோர் கூறுகையில், “தென்மேற்கு பருவ மழை ஏமாற்றியதால், குளங்கள், நீர் நிலைகள் வற்றிப் போய் விட்டன. ஆழ்துளை கிணறுகளிலும் நீர் வரத்து குறையத் துவங்கி விட்டது. இதனால், உருளைக் கிழங்கு விதைகள் கருகியுள்ளன,"."பயிர்கள் காய்ந்து வருகின்றன. கேரட் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ கேரட் விதை, 20 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு ஏக்கரில் கேரட் பயிரிட 2 லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. மழை ஏமாற்றியதால், பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது,” என்றனர்.விவசாய நிலங்கள் காய்ந்து விட்டதால், தோட்ட உரிமையாளர்கள் லாரித் தண்ணீரை தோட்டங்களுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

## மண்ணின் வளத்தை அதிகரிக்க செய்யும் பசுந்தாள் செடிகள்; நெல் ஆராய்ச்சி மையத்தில் ஆய்வு

**கூடலூர்** : "கூடலூர் வயல் நிலங்களில் இயற்கை வளத்தை அதிகரித்து, பயிர் விளைச்சலில் முன்னேற்றம் காண பசுந்தாள் செடிகளை பயன்படுத்த வேண்டும்' என, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கூடலூர் புளியாம்பாறையில், கோவை வேளாண்மை பல்கலைக்கழக "வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையம்' செயல்பட்டு வருகிறது. இங்கு, ஆண்டு தோறும் மண்ணின் இயற்கை வளத்தை அதிகரித்து, விளைச்சலில் முன்னேற்றம் காண, பசுந்தாள் உரச் செடிகளை வளர்த்து, இயற்கை உரமாக பயன்படுத்தி வருகின்றனர். மேலும், இது குறித்து வெவ்வேறு ஆய்வுகளும் நடத்தப்பட்டு வருகிறது.நடப்பாண்டில்,பசுந்தாள் உரத்துக்காக, சணப்பை செடிகளை வளர்ந்து, அவை பூ பூக்கும் முன் உழுது நிலத்துடன் சேர்க்கும் பணி நடந்து வருகிறது.

இது குறித்து, வீரிய ஒட்டு நெல் ஆராய்ச்சி மையத்தின் பேராசியர் மற்றும் தலைவர் மனோர்மணி கூறுகையில்,""நெல் பயிர் அறுவடைக்கு பின், பசுந்தாள் உர செடிகளை நடவு செய்து, அவை பூ பூக்கும் முன் அப்படியே உழுது நிலத்துடன் சேர்க்க வேண்டும். இப்படி செய்வதன் மூலம், மண்ணில் இயற்கை வளம் கூடுவதுடன், அடுத்த பருவத்தில் நடக்கும் விளைச்சலில் முன்னேற்றம் ஏற்படும். இங்குள்ள நெல் விவசாயிகளும் இம்முறையை பயன்படுத்தி வளம் பெற முடியும்," என்றார்.

## மாவட்டத்தில் 6 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வர இலக்கு கலெக்டர் சம்பத் தகவல்

**விழுப்புரம்,** மாவட்டத் தில் 6 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை சாகு படிக்கு கொண்டு வர இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் சம்பத் தெரி வித்துள்ளார்.

கலந்தாய்வு கூட்டம்

விழுப்புரம், திருவண்ணா மலை மாவட்டங்களில் தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருதல் தொடர்பாக 2 மாவட்டங்களை சேர்ந்த வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் அத்துறையைசேர்ந்த மாவட்ட அளவிலான அதி காரிகள், வயல் அதிகாரி களுக்கான கலந்தாய்வு கூட்டம் விழுப்புரம் கரும்பு விவசாயிகள் சமுதாய கூடத்தில்

நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் சம்பத் தலைமை தாங்கி பேசியதாவது:–

சாகுபடிக்கு கொண்டு வரப்படும்

தமிழக முதல்– அமைச்சர் ஜெயலலிதா சட்டசபை கூட்டத் தொடரில், தமிழ் நாட்டில் 12,500 ஏக்கர் தரிசு நிலங்கள் சாகுபடிக்கு கொண்டு வரப்படும் என அறிவித்திருந்தார்.அதன்படி 2013–14–ம் ஆண்டு முதல் கட்டமாக தேசிய வேளாண்மை வளர்ச்சி திட் டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட் டாரத்தில் 100 ஏக்கர் பரப் பில் தரிசு நிலங்கள் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் ரூ.4ஆயிரம் மதிப்பில் நில மேம் பாட்டு பணிகளும், வேளாண்மைத் துறையின் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1,600 மதிப்பில் விதைகள் மற்றும் முக்கிய இடுபொருட்கள் வாங்கு வதற்கும் மானியம் வழங்கப்பட்டது.

6 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள்

இந்த திட்டத்தின் கீழ் 46 விவசாயிகளின் வயல்களில் கடந்த ஆண்டு ராபி பருவத்தில் உளுந்து பயிர் செய்யப்பட்டது. உளுந்து பயிர் ஏக்கர் ஒன்றுக்கு 215 கிலோ மகசூல் கிடைத்தது. நடப்பு ஆண்டில் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 12,400 ஏக்கர் பரப்பில் தரிசு நிலங்கள் சாகுபடிக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டு விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரம் ஏக்கரில் 22 ஒன் றியங்களில் தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. திருவண்ணா மலை மாவட்டத்திலும் தரிசு நில சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கலெக்டர் சம்பத் பேசினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் தலைமை பொறி யாளர் செந்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ராதா, வேளாண்மை இணை இயக் குனர்கள் சக்கரவர்த்தி, ஜெயச் சந்திரன், சென்னை அலுவலக வேளாண்மை துறை துணை இயக்குனர் பரசுராமன், சந்தான கோபாலகிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**<u>சின்னசேலம் பகுதிகளில் சேனைக்கிழங்கு அறுவடை செய்வதில் விவசாயிகள் தீவிரம்</u>**

**சின்னசேலம்**,பகுதிகளில் சேனைக்கிழங்கு அறு வடை செய்வதில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சேனைக்கிழங்கு சாகுபடி

விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் பகுதியை சேர்ந்த வானவகொட்டாய், பாண்டி யங்குப்பம், மரவானந்தல், எலவடி, அம்மையகரம், மூங் கில்பாடி, தகரை, நாகக்குப்பம், கல்லாநத்தம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் வேளாண்மைத்துறை அதி காரிகள் வழிகாட்டுதலுடன் குறைந்த செலவில் அதிக லாபத்தை அள்ளித்தரும் 10 மாத பயிரான சேனைக்கிழங்கு பயிரை அதிகளவில் சாகுபடி செய்து பராமரித்து வளர்த்து வருகின்றனர். அதன்படி சேனைக்கிழங்கை பாத்தி முறையில் நடவு செய்து 3 மாதங்களுக்கு ஒருமுறை கிழங்கு தண்டுகள் பூமிக்குமேல் முளைத்து வருகிறது. அதன் பின்னர் சேனைக்கிழங்கு செடியின் இலைகள் பழுத்து மடங்கும்போது கிழங்கு முற்றிய நிலையில் அறு வடைக்கு தயாராகி விடுகிறது. இவற்றை அறுவடை செய்யும் பணியில் தற்போது விவசாயி கள் தீவிரமாக ஈடுபட்டுள் ளனர்.

அறுவடை

இங்கு அறுவடை செய்யப் படும் சேனைக்கிழங்குகளை சென்னை, கோவை,

மதுரை மற்றும் கேரளா, கர்நாடகாவை சேர்ந்த வியாபாரிகள் நேரடி யாக வந்து அதிகபட்சமாக ஒரு கிலோ ரூ.7 வரை விலை கொடுத்து கொள்முதல் செய்து மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். இதுகுறித்து, விவசாயி ஒருவர் கூறுகையில், சின்னசேலம் பகுதிகளை சேர்ந்த 20–க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் சேனைக்கிழங்கு பயிர் செய்து 10 மாதம் வரை பராமரித்து அறுவடை செய்து விற்பனை செய்து வருகிறோம். இதில் கிடைக்கும் லாபத்தை வைத்து பிழைப்பு நடத்தி வருகின்றோம். சேனைக்கிழங்கு பயிர் செய்ய குறைந்த செலவு செய்தாலும் செலவை விட கூடுதல் லாபம் கிடைப்பதால் சேனை பயிரை இப்பகுதி விவசாயிகள் ஆர்வமாக பயிர் செய்து வருகின்றனர். மேலும் இங்கு அறுவடை செய்யப்படும் சேனைக்கிழங்கை வெளி மாநில, மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு காய்கறி மார்க்கெட்டுகளுக்கும் உணவுக்காக ஜப்பான் நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப் பட்டு வருகிறது என்றார்.

## ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை தேங்காய் ஏலம்

**ஆனைமலை**,ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் கண்காணிப்பாளர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. 50 விவசாயிகள் பொது ஏலத்திற்கு 137 மூட்டை கொப்பரைகளை கொண்டு வந்தனர். ஏலத்தில் 10 வியாபாரிகள் கலந்து கொண்டனர். 59 மூட்டை முதல் ரக கொப்பரை ரூ.98.10 முதல் ரூ.99.10 வரையும், 68 மூட்டை 2–ம் ரக கொப்பரை ரூ.75 முதல் ரூ.92.15 வரையும் ஏலம் போனது.

பருவமழை காரணமாக கொப்பரை உற்பத்தி குறைந்தது. இதனால் நேற்று நடைபெற்ற ஏலத்திற்கு கொப்பரை வரத்து குறைந்ததால் விலை அதிகரித்து காணப்பட்டது. மேலும் மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலை அதிகரித்ததாலும் கொப்பரை விலை அதிகரித்து இருந்தது என்று கண்காணிப்பாளர் செல்வராஜ் தெரிவித்தார்.